
# தமிழகப் பழங்குடிகள்

## வரலாறு சமூகம் பண்பாடு

முதன்மைப் பதிப்பாசிரியர்
முனைவர் ச. அரிச்சந்திரன்

தொகுதி – 1



பதிப்பாசிரியர்
முனைவர் ஆ. சரவணன்

**தமிழகப் பழங்குடிகள்; வரலாறு சமூகம் பண்பாடு**
**(தேசியக் கருத்தரங்கம்)**

| | | |
|---|---|---|
| முதன்மைப் பதிப்பாசிரியர் | : | **முனைவர் ச. அரிச்சந்திரன்** |
| பதிப்பாசிரியர் | : | **முனைவர் ஆ. சரவணன்** |
| பதிப்புரிமை | : | **முனைவர் ச. அரிச்சந்திரன்** |
| முதற்பதிப்பு | : | ஆகஸ்ட், 2018 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை (சுயநிதிப்புலம்)**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641 029. |
| கணினியாக்கம் | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476, பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XXVI + 432 = 458 |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 80800 - 89 - 9**

**Tribes of Tamil Nadu ; History Society and Culture**

| | | |
|---|---|---|
| Chief Editor | : | **Dr. S. Arichandran** |
| Editor | : | **Dr. A. Saravanan** |
| Copyright's | : | **Dr. S. Arichandran** |
| First Edition | : | August, 2018 |
| Published | : | **Department of Tamil (SF)**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XXVI + 432 = 458 |
| Prize | : | **Rs. 400/-** |

# பொருளடக்கம்


1. பண்பாட்டு மீட்டுருவாக்கத்தில் பழங்குடிகள் 1

முனைவர் பக்தவத்சல பாரதி

2. பழங்குடியினர் பண்பாடு 13

ந. நஞ்சப்பன்

3. தென்னிந்தியப் பழங்குடிகள் குறித்த சில கருத்தாக்கங்கள் 36

முனைவர் பீ. டாக்டர் நசீம்தீன்

4. தமிழக இருளர் பழங்குடியினரின் மாசி மக முழுநிலவு நாள் கூடுகை ஒரு சமூக - மானிடவியல் பார்வை 43

முனைவர் சி. மகேசுவரன்

5. இருளர்களின் சடங்குகளில் நாடக நிகழ்த்துக் கூறுகள் (கோத்தகிரி வட்டார இருளர்களின் சடங்குகளை முன்வைத்து) 60

முனைவர் ராம்ராஜ்

6. கிழக்கு கடற்கரைப் பகுதி இருளர்களின் மொழி மற்றும் பண்பாட்டுப் பதிவுகள் 66

முனைவர் ப. குமரேசன்

7. பாலமலை குஞ்சூர்பதி இருளர் மக்களின் வாழ்வியல் சடங்கு முறைகள் 72

முனைவர் க. பழனிவேல்

8. அட்டுக்கல் இருளர் பழங்குடி மக்களின் மருத்துவமுறை 77

முனைவர் எம்.ஏ. சிவராமன்

9. இருளர் பழங்குடி மக்களின் மருத்துவ முறைகள் 82

முனைவர் பூ.மு. அன்புசிவா

10. Ethnomedicinal Plants Used by the Irula Tribes of Maruthamalai Hills, Western Ghats of India 93

**A. Venkatachalapathi and S. Paulsamy**

11. தவறிய மரபுகளும் உடற்கூறு மாற்றங்களும் அட்டப்பாடி இருளர் பற்றிய அரிய பதிவுகள் 105

முனைவர் மு. நாகராஜன்

# 11. தவறிய மரபுகளும் உடற்கூறு மாற்றங்களும் அட்டப்பாடி இருளர் பற்றிய அரிய பதிவுகள்

**முனைவர் மு. நாகராஜன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்-641 029

## முன்னுரை

கேரள மாநிலம் அட்டப்பாடி ஆதிவாசி மலையின மக்களில் இருளர், முடுகர், குரும்பர் என்ற மூன்று பிரிவினர் உள்ளனர். அவர்களில் எழுபத்தைந்து சதவீதத்தினர் இருளர் இன மக்கள். அட்டப்பாடி பகுதியில் ஏறக்குறைய நூற்று முப்பத்தொன்பது ஆதிவாசி கிராமங்கள் உள்ளன. அக்கிராமங்களில் சுமார் முப்பதாயிரம் பேர் வசிக்கின்றனர். சில கிராமங்களில் சிட்லஸ் இன மக்கள் உள்ளனர். ஒரு காலத்தில் கன்னியாகுமரி கேரளா உடனும் அட்டப்பாடி தமிழகத்துடனும் இருந்தது. புவியியல் அமைப்பு அடிப்படையிலே அட்டப்பாடியை கேரளா உடனும் கன்னியாகுமரியைத் தமிழகத்துடனும் இணைத்தனர்.

அன்றைய ஆதிவாசி தலைமுறையினர் காடுகளில் கிடைக்கக்கூடிய கனிகளையும், உணவுகளையும் பெற்று ஆதிவாசியின மக்கள் இன்பமாக உண்டு உறங்கினர். மாபியாவை (குருப்ஸ்) சேர்ந்தவர்கள் தங்களது சுய லாபத்திற்காகக் காடுகளை அழித்ததால் ஆதிவாசி மக்கள் காடுகளில் இருந்து வெளியேறினர். காடுகளை மீட்டுருவாக்கம் செய்யத் தெரியாததால் ஆதிவாசியின முதல் தலைமுறையினர் நாட்டிலும் காட்டிலும் இல்லாமல் துன்பப்படுகின்றனர். அவர்களுக்கு மருத்துவம் பார்ப்பது பெரும் சவாலாகவும் இடர்ப்பாடு நிறைந்ததாகவும் உள்ளது.

## முதல் தலைமுறையினர்

முதல் தலைமுறையைச் சார்ந்த இருளர் இன ஆதிவாசி மக்கள் தங்களுடைய நிலத்தை சீரமைக்கத் தெரியாமல் தவிக்கின்றனர். அரசாங்கம் இவர்களுக்கு ஐந்து ஏக்கர் நிலத்தை இனாமாகக் கொடுத்தும் கட்டமைப்பை மாற்றத்தெரியாமல் அவதிப்படுகின்றனர். அதற்கு முக்கியக் காரணம் நூறு சதவீதம் இவர்கள் எழுத்தறிவு அற்று இருப்பதே. அரசு எண்ணற்ற சலுகைகளை வழங்கினாலும் அதனை பயன்படுத்தத் தெரியாததால் தவிக்கின்றனர். உதாரணமாக ஆடு, மாடு, கொடுத்தாலும் அதனை சரியாக பராமரிக்காமல் விற்று விடுகின்றனர்.